செ.வெ.எண்:16 நாள்:08.01.2019

மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் கரூர் மாவட்டம் மாற்றுத்திறனாளிகளுக்கான நல ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின் படி கரூர் மாவட்டத்தில் உள்ள தசைசிதைவு நோய் மற்றும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட இரண்டு கால்களும், இரண்டு கைகளும் செயலிழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டி (பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள்) வழங்குவதற்க்காக தகுதியான கீழ்கண்டவாறு மாற்றுத்திறனாளிகளிடமிருந்து

1. தசைச்சிதைவு நோய் அல்லது பக்கவாதம் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட இரண்டு கால்களும், இரண்டு கைகளும் செயலிழந்த தேசிய அடையாள அட்டை பெற்ற மாற்றுத்திறனாளிகள்.
2. கல்வி பயிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கியும், அடுத்த நிலையில் பணிபுரியும் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கும், எஞ்சிய சிறப்பு சக்கர நாற்காலி தேவையின் அடிப்படையில்
3. ஒதுக்கீடுகள் செய்யப்படும் இந்த சிறப்பு சக்கர நாற்காலி 10% மத்திய ,மாநில அரசுகள் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளுக்கு மூத்த குடிமக்களான 60வயதிற்கு உட்பட்ட ஆண் மாற்றுத்திறனாளிகளுக்கும், 55 வயதிற்கு உட்பட்ட பெண் மாற்றுத்திறனாளிகளுக்கும்
4. மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் மோட்டார் பொருத்தப்பட்ட நகரும்வண்டி (பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள்) 1 நபருக்கு ஒருமுறை மட்டுமே வழங்கப்படும்
5. அரசாணை வெளியிட்ட நாளிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் முதுநிலை அடிப்படையில் அரசின் நிதி ஒதுக்கிட்டிற்கு ஏற்ப பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகளை தகுதியான பயனாளிகளுக்கு வழங்கபடும்
6. இத்திட்டத்தின் கீழ் பயனடையும் பயனாளிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் கீழ் அரசு எலும்பியல் மருத்துவர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மற்றும் தசைசிதைவு நோய் மற்றும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி பிரதிநிதி ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட குழு மூலம் தேர்வு செய்யப்படும்

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், அறை எண் 07 மாவட்டஆட்சியர் அலுவலக வளாகம், கரூர் என்ற முகவரிக்கு மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பித்து பயனடையுமாறு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**